DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | CC No. 283/2025 | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 3 | P.W.2 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமேஷ்வரன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது தளி காவல்நிலையத்தில உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன் உடுமலை காவல் நிலையத்தில் உதவியாளர் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 15.03.2025 ம் தேதி காலை 06.30 மணியளவில் நானும் ,சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் , காவலர் மணிகண்டன் ஆகியோருடன் உடுமலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு குற்றங்களை தடுக்கும் விதமாக ரோந்து சென்று கண்காணித்துக் கொண்டு செல்லும் பொழுது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காலை 07.00 மணி அளவில் உடுமலை டவர் டாஸ்மாக் திறந்த இடம் அருகில் கண்காணித்த போது ஒரு நபர் கையில் ஒரு பையுடன் உட்கார்ந்து கொண்டிருந்த வருடம் இரண்டு பேர் வாங்கிக் கொண்டு இருந்தார்கள் போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓடிவிட்டனர் பின்பு அங்கு கையில் கையுடன் இருந்தவரை நாங்கள் பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயரை காட்டு ராஜா த/பெ. சண்முகம் இளையான்குடி தாலுக்கா சிவகங்கை மாவட்டம் என்று கூறியவர் பொது இடத்தில் அரசின் அனுமதி இன்றி சட்டவிரோதமாக 180 எம்எல் அளவுள்ள எக்ஸ்பிரஸ் பிராந்தியுடன் கூடிய பிராந்தி பாட்டியுடன்

கூடிய அரசு மதுபான கடையில் இருந்து வாங்கி வந்து அரசு மதுபான கடைகள் மூடிய நேரத்தில் விற்று அதிக லாபம் பெற வேண்டி விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாகவே முன்வந்து எடுத்து ஆஜர் செய்தார் அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் என்னுடன் வந்த காவலர் மணிகண்டன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் ஆகியோரின் முன்னிலையில் 7.30 மணிக்கு கைப்பற்றுதல் தயார் செய்து எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் 11.50 மணிக்கு நிலையம் ஆஜராகிநிலைய குற்ற எண் 153/2025 சட்டப்பிரிவு 4(1) (C )சி டி என் பி திருத்தச் சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அசல் நகல்களை உயரதிகாரிகளுக்கும் கனம் நீ தி மன்றததிற்கு அனுப்பி வைத்து சாட்சிகள் மணிகண்டன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . பின்னர் எதிரியை பரிசோதனைக்கு பின் தக்க இரண்டு நபர் ஜாமினில் விடுவித்தேன். வழக்கு சொத்துக்களை வடிவம் 91 மூலமாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது. எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் அசா.பொ.1 என்றும் வெள்ளை நிற பை அசாபொ.2 என்றும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் புலன் விாசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நீங்கள் ரோந்து பணிக்கு சென்றதற்காக காவல் நிலையத்தில் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நீங்கள் போகும் போதும் அதிக நபர்கள் இருந்தார்கள் என்றால் அதிக நபர்கள் இல்லை சுமார் 4–5 பேர் இருந்தார்கள். உங்களின் உயர் அதிகாரிகளால் அதிக வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுளளது என்றால் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் இலக்கு இல்லை. நீங்கள் பொய்யாக செய்கிறீர்கள் என்றாலும் இத்தனை வழக்குகள் வழக்குகள் பதிவு செய்ய வேண்டும் என்ற இலக்கு உள்ளது என்றால் இல்லை. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் பொதுஜன சாட்சிகளை விசாரித்து இருப்பீர்கள் என்றாலும் ஓடிப்போன நபர்களையும் பிடித்திருப்பீர்கள் என்றாலும் சரியல்ல, பொதுஜன சாட்சிகள் யாரும் முன் வரவில்லை. காவல் நிலையத்தில் வைத்து வழக்காவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றாலும் உங்களுக்கு ஏற்றார் போல் சாட்சிகளை சேர்த்துள்ளிர்கள் என்றாலும் சம்பவ

இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரி அல்ல. எதிரிக்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.